புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# தனிமனிதப் பண்பாடும் தமிழர் போற்றிய அறமும்

முனைவர் கிமோகனாம்பிகா.பே.
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு -12

ஆய்வுச் சுருக்கம்

ஒவ்வொரு அமைப்பிலும் தனிமனிதனே அதன் தொடக்க நிலையாகத் திகழ்வதால் அவ்வமைப்புத் திறன்பட செயலாற்றத் தனிமனிதப் பண்பாடு இன்றியமையாததாகிறது . .இதனைக் கருத்தில் கொண்டும்தமிழர்கள் பின்பற்றிய, உலகோர் பின்பற்ற வேண்டிய அறங்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

உலக நலன் கருதி பண்டைத் தமிழர்கள் வாழ்ந்ததால் ஒவ்வொரு தனிமனிதனும் உயர்ப் பண்பாளராகவும் அறச் சிந்தனையாளராகவும் இருத்தல் தேவையான ஒன்று என்று கருதினர். இவர்களின் சிந்தனையை வெளிப்படுத்தும் வகையில் சங்க இலக்கியம் அமைந்துள்ளது. உலகையே ஒரு குடையின் கீழ் இணைக்கும் ஐ. நாஅமைப்பில்., 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறம் 192:1) என்ற வரி இடம் பெற்றிருப்பதை இதற்குச் சான்றாகக் கூறலாம்தமிழர்களின் . சிந்தனையை உலகமே அவாவுகிறது என்பதை இந்நிகழ்வு காட்டுகிறதுஇந்த . அடிப்படையில் தனிமனிதன் போற்றிய உ யர் பண்புகளையும், அறச்சிந்தனைகளையும், வெளிப்படுத்துவதே நோக்கமாக விளங்குகிறது.

'பண்பு எனப்படுவது பாடறிந் தொழுகல்' என்பர்.' பண்பாடு எனுஞ்சொல் அண்மைக்கால ஆக்கமாகும்.' எனினும் பண்பு, பண்புடைமை பண்படுத்துதல் முதலிய சொற்கள் இதற்கு முன் வழக்கில் உள்ளவையாகும். திருவள்ளுவர் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து பண்புகளின் கூட்டையே பண்புடைமை என்பார்.' வித்திடற்கும், விழைதற்கும் ஏற்றவாறு நிலந்திருத்துதலையும், நற்கருத்துகள் ஊன்றுதற்கும், தோன்றுதற்கும் இசைந்தவாறு மனம் செம்மைப்படுதலையும் குறிக்கப் 'பண்படுதல்' என்னும் சொல்லைக் கையாள்வதை ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் காணலாம்.

## பண்பாடு சொல்லும் பொருள்களும்:

பண்பாடு என்பதற்குரிய விளக்கத்தை முதன் முதலாக ஆங்கிலேயத் தொல்லுயிர் நூல் அறிஞர் சர் எட்வர்ட் டைலர் என்பவர் கி.பி.1871 இல் எடுத்துரைத்தார். சமூக உறுப்பினர் என்ற முறையில் மனிதன் பெற்ற அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுக்க நெறிகள், வழக்கங்கள், தகுதிகள், பழக்கங்கள் ஆகியவற்றின் முழுத் திரட்சியே பண்பாடாகும் வழிமுறை வழிமுறையாக மனிதக்குழுக்கள் தம் பிறங்கடையினரும் கடைபிடிக்கும் வகையில் ஒழுகிவரும் ஒழுகலாறு அல்லது வாழ்நெறியே பண்பாடு என்று சிலர் விளக்கம் கூறினர்அறிவாற்றல் "., சிந்தனைத்திறன், நம்பிக்கைகள் ஆகியன பண்பாட்டின் அடித்தளங்கள் எனினும் மக்கள் வாழுகின்ற சூழலும் இவற்றோடு எண்ணத்தக்கதாகும்..

## சான்றாண்மை:

உலகம் அல்லவை தவிர்த்து நல்லவை போற்றி ஒழுக வழிகாட்டிச் செல்லும் பெரியோரே சான்றோர் ஆவர். தெய்வ வழிபாடாயினும், மக்கள் வாழ்க்கையில் நடைபெறும் திருமணம் முதலிய சடங்குகளாயினும் எல்லாம் சான்றோரை முன்னிட்டே ஆற்றப்பெறுகின்றன. பெரியோர் சென்ற நெறியே பின்புள்ளாருக்கும் மேல்வரிச் சட்டமாக விளங்கும் .

*தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் பகைவரை வென்று அவரை அறநெறியில் நிறுத்த காலத்து . பெரியோர் நடந்த அடிப்பாட்டின் வழிகாட்டித் திருத்துகிறான் என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது*

*சான்றோர், ஆன்றோர் என்பன நிறைவு என்னும் பொருள் தரும் சால், ஆல் என்னும் பண்பின் அடியாக வந்த பெயராகும்இப்பெயர்களுக்கு எல்லா வகை நற்குண நற்செயல்களாலும் . இவர் .நிரம்பியவர் என்பது பொருள் நூலறி புலவர் : உலக நடப்புகளை நன்குணர்ந்தவர் ; குற்றமற்ற சிறப்புடைய பெருங்குணங்களுக்கு நிலைக்களமானவர் . எனவே, இவர் புகர் அறு சிறப்பின் செம்மைச் சான்றோர்' (மதுரை 764-765) எனப் புகழப்படுவர் . இவர்கள் சால்பும் மேம்பாடும் ஒருங்கே கொண்டவர் ஆவர்." இவர்கள் ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினராய் விருப்பு வெறுப்பு இன்றி யாவர்க்கும் ஒத்த பெருநெறியில் செல்லும் பெற்றியராவர் . புலவர் பிசிராந்தையார் தமக்கு யாண்டு பல ஆகியும் நரை இல்லாமைக்குக் கூறிய காரணங்களில், எல்லாவற்றிற்கும் மேலாகத் தாம் வாழும் ஊரில் சான்றோர் பலராக வாழ்வது தான் என்கிறார். . இதனால் சான்றோர்களால் அமைதியான வாழ்வு உளதாதல் பெறப்படும் . இவர், 'சால்பு எதிர்கொண்ட செம்மையோர்' ஆவர்.*

*அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க்குஇல்லை*
*சான்றோர்*
*புகழும் முன்னர் நாணுப*
*பழியாங்கு ஒல்பவோ காணுங்காலே (நற்றினை -254:6-8)*

*பேணுப் பேணார் பெரியோர் என்பது*
*நாணுத் தக்கன்று, அது காணுங்காலை ( நற்றினை 72:1-2)*

*என வருவன சான்றோருடைய பண்பின் விழுப்பத்தைக் காட்டும்சான்றோர் தம .ு நலனைச் சிந்தை செய்யாது சமுதாய நலன் நாடும் பேரருளாராக விளங்கும் பண்பாட்டினர் . நற்றினையும் .இப்பண்பாட்டினை, அகநானூறும், புறநானூறும் புகழ்ந்துறைக்கின்றனசான்றோர் . பிறர்க்கு ஏற்படும் துன்பத்தையும் தமக்கு ஏற்பட்டது போலக் கருதி, அதனைப் போக்க முனைவர் என்பதை, கலித்தொகையும், அகநானூறும் உரைக்கின்றன.*

*பேரும்புகழும் ., பொன்னும், பொருளும், முதலிய போகப் பொருள்களும் ஒருவர் பெற்றிருப்பினும் அவை செல்வம் எனப்படா . அவை எல்லாம் செய்வினைப் பயனால் உண்டானவையாகும் சான்றோர் . மதிக்கும் செல்வமாவது பிறர் துன்பம் கண்டு அஞ்சி அத்துன்பத்தைப் போக்குவதற்கு ஆவன செய்வதுவேயாகும் எந்த இடத்தில் சான்றோர் வாழ்கின்றனரோ அந்த இடம் தான் நல்ல இடம் நிலத்தின் வளமையினால் ஒரு நிலத்திற்குச் சிறப்பு வருதல் இல்லை சான்றோர்கள் . வாழ்தலினால் தான் ஒரு நாடு சிறப்புடன் போற்றப்படுவதாகிறது.*

*சால்பு என்பதைத் தம்மகத்தே நிறுத்தி அதனை ஆளும் தகுதி பெற்ற உயர்ந்தோர் சான்றோர் எனப் பெற்றார் . இச்சான்றோரை*

*மையறு சிறப்பின் உயர்ந்தோர்"*

*என்று தொல்காப்பியம் புகழ்கின்றது*

*சான்றோர்களில் புலவர் பெருமக்களும் சிறந்த இடம் பெறுகின்றனர் புலவர்கள் . இலவ மலர் போன்ற அழகிய செந்நாவையும் புலமையால் வரும் புகழ்ந்து போற்றும் பெருங்கீர்த்தியையும் கொண்ட உயர்ந்தோர் ஆவர்.*

*'இலமலர் அன்ன அம் செந்நாலின்*
*புலம் மீக்கூறும் புரையோர் " (அகநானூறு 142:1-2)*

*என்று புகழப்படுகின்றனர் . இவர்களால் பாடப்பெறும் புகழ்ச்சியையே மன்னர்களும் மற்றையோரும் வேண்டி நிற்கின்றனர் . புலவர்கள் பெருமையற்ற வாழ்வுடையாரைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.*

'பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரையே அவர்கள் விரும்பினர் . தீமை புரிந்தாரையும் அவர் மரபினையும் அவர்கள் வெறுத்தனர் . ஏதேனும் ஒரு புலவர்க்குச் செய்த தீங்கைக் கூடப் புலமைக்குச் செய்த பெருங்குற்றமாகக் கருதி, அவர்களை வேறு புலவர் யாருமே வாழ்த்திப் பாடுதல் இல்லை . .

மன்னர்களும், வள்ளல்களும், குடிபடைகளும், புலவர்களையும் பாணர், கூத்தர், விறலியர் முதலிய இசைப் புலவர்களையும் பல்வகையாகப் புரந்து போற்றியமையைப் புறநானூறு, பத்துப்பாட்டு முதலியவற்றில் பரக்கக் காணலாம்புலவர்க்குப் பொன்னும் ., மணியும், யானையும் நிலமும் பிற பொருள்களுமாக ஈந்து அவர்களைப் புரந்தனர் . மன்னர், புலவரை வழி அனுப்புங்கால் அவர்களுக்கு வேண்டும் பொருள் அளித்து, அவர் பின் ஏழடி சென்று அனுப்பி வைப்பர் . கரிகாலன் பொருநர்க்குப் பரிசில் ஈந்து, அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிய காட்சியைப் பொருநராற்றுப்படை அடிகளில் காணலாம்

முரசு கட்டில் என அறியாது களைப்பினால் தூங்கிவிட்ட மோசிகீரன் புலவனாதலின் அவனுக்குத் துன்பம் தராததோடு கவரி கொண்டும் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறைவிழித்தெழுந்த பின் புலவர் உண்மை உணர .ந்தாராய், அம்மன்னன் தமிழ் முழுது அறிந்த தன்மையால் தமிழன்னைக்குச் செய்த சிறப்பு என அவன் செய்கையைப் போற்றுதல் உள்ளமுருக்கும் உரைகளாம். தன்னை அவன் வாளால் வெட்டாதொழிந்ததொன்றே அவன் தமிழ் முழுதறிந்தமைக்குப் போதும்அதனொடும் நில்லாது விசிறி கொண்டும் தமக்கு . வீசினானே என்றும் புலவர் வியக்கின்றார் . இம்மை உலகில் இசை படைத்தார்க்கே உயர்நிலை உலகம் உண்மை தெரிந்து ம ன்னன் அவ்வாறு செய்தனனோ என்று கேட்கிறார்.

நட்பு:

பண்பாட்டு வளர்ச்சியில் நட்புக்கும் ஒரு சிறப்பிடம் உண்டுஉண்மையான நட்பு . பயன்கருதாதது. நண்பரின் நன்மையை நாடுவது உறவுகள் எல்லாவற்றினும் உண்மையானது . மனித உயிர் உலகில் பிறக்கும் போதே நட்பு தொடங்கி விடுகின்றதுகுழந்தை பிறக்கும்போது . .அதற்குப் பாலூட்டும் தாயோடு நட்பு தொடங்குகின்றது வளரும் போது குடும்ப உறவுகளுடன் தொடர்கின்றதுஇளமைப் பருவத்தே ஒ .த்த பண்புடையாருடன் உள்ளம் கலந்து நட்பாய் இணைகின்றது . இதயங்கலந்த காதற் கேண்மையில் நட்புக் காதலாய்க் கனிகின்றது . சமுதாயத்தில் பிறருடன் கூடி வாழும் போது வளர்கின்றது . பலருடன் உறவு கொள்ள உறுதுணையாகின்றது.

அக இலக்கியங்கள் தலைவன் தலைவியர் ஒருவர் மாட்டு மற்றொருவர் கொள்ளும் அன்பினை காதற் கேண்மையை நட்பு என்றே குறிப்பிடுகின்றன மலைகெழு . நாடனொடு தான் கொண்ட நட்பு நிலத்தினும் பெரியதாய், வானினும் உயர்வுடையதாய், கடலினும் ஆழமானதாய் ஒரு காலைக் கொருகால் பெருகி நிற்கும் என்று கூறுகிறாள் தலைவிதலைவனோ .,

'பயிலியது கெழீஇய நட்பு' (குறுந் 2:3)

என்றுதான் தலைவியிடம் கொண்ட அன்பினைப் பிறவிதோறும் தொடரும் இயல்புடையது என்று வெளிப்படுத்துகிறான்.

யாக்கைக்கு
உயிரியைத் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவறி யோளே *"!( அகநானூறு 339:12 – 14)

என்று தலைவன் தலைவி இருவரிடையே நிலவிய நட்புக் குறித்து அகநானூறு மொழிகின்றது . தோழி தலைவி ஆகிய இருவரிடையே உள்ள இசைந்த நட்பினை,

"யாமே பிரிலின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஒருயி ரம்மே "!(அகநானூறு 12:3 – 4)

என்ற தோழியின் கூற்றுப் புலப்படுத்தும் .

தனிமனிதன் சமுதாயத்தோடு உறவாட நட்பு துணை செய்கின்றதுமனிதர்களிடையே . மனித நேய ஒருமைப்பாட்டை மலர்விக்கின்றது .'

யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறம் )

என்பது தமிழ் இலக்கியம் காட்டும் உலகளாவிய நட்பு ஆகும்.

நண்பரைத் தேர்ந்து கொள்ளும் முன் அவரைப் பற்றி ஆராய்ந்து அறிந்து நட்பு கொள்ளுதல் வேண்டும் நட்பு செய்த பின் அவர் . பற்றி ஆய்தல் பண்பில்லை என்று நற்றினைக் கூறுகின்றது. தீயோர் நட்பாயினும் நாடிப் பெற்ற பின் பிரிதல் கூடாது பிரிந்தால் . துன்பம் தரும் . நாடி நட்பு கொண்ட பின்,

"நல்ல போலவு நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காத னெஞ்சினும் மிடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொது மொழி கொள்ளாது.".34 (புறநானூறு 58:24 – 27)

நட்பு நிலை பெற வேண்டும் என்ற நட்பு நெறியினைச் சங்க இலக்கியம் வலியுறுத்துகின்றது . சந்தன மரத்தில் சேர்க்கப்பட்ட தீந்தேன் போல உயர்ந்தோரின் நட்பு உயர்ந்ததுவேட்டையில் . .இடப்பக்கத்தே வீழ்ந்த பன்றியை உண்ணாது யானையை வலப்பக்கம் வீழ்த்தித் தன் பசிக்கு உணவு ஏற்கின்ற புலியைப் போன்ற மன வலிமையும் கொள்கைப்பிடிப்பும் உடையவரே நண்பராதற்கு உரியவர் . விளை வயலில் நெற்கதிர்களைப் பதுக்கி வைத்து உண்ணும் எலி போன்ற உள்ளம் உடையவர் நண்பராதற்குத் தகுதி அற்றோர்எனவே ., புலியனையார் நட்பினைக் கொள்க . எலியனையார் நட்பினைக் கொள்ளற்க என்று நட்பு நெறியினைப் புறநானூறு அறிவுறுத்துகின்றது".

கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் நட்பு ஒருவரை ஒருவர் காணாது உள்ளத்தால் ஒன்றிய நட்பு நுங்கோன் யாரெனக் கேட்பின் கோழியோனே கோப்பெருஞ்சோழன் . என்று பிசிராந்தையாரும்,

"தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடையன்!..." (புறநானூறு 216:8-10)

என்று கோப்பெருஞ்சோழனும் கூறிய மொழிகள் உள்ளம் கலந்த நட்பின் உயர்வைக் காட்டுகின்றன

புகழ்

பண்டைத் தமிழர்கள் தங்கள் வாழ்வில் விழுமிய நெறிகளுள் ஒன்றாகப் புகழைக் கருதினர் . மறுமைப்பேறு, மறுபடிப் பிறவாமை, புகழ் ஆகிய மூன்றும் அறவோர் அவாவின உயர்ப் பண்புகளாகும் முன்னிரண்டு கிட்டா விடினும் புகழ் கிடைப்பின் அதுவே . நோன்று பெறுதற்குரியதாம் எனக் கருதினர்அறத்தின் வழியாகக் கிடைக்கும் . இம்மைப் புகழை ஓர் உயர்தகவாகக் கருதியமை அறியப்படும்இம்மைக்குப் புகழ் மொழியும .் மறுமைக்கு அறமும் நிலைபெற விளங்கும் பெரிய சோறிடுஞ்சாலை புகார் நகர்க்கண் விளங்கியதுஎன்பதை " அறம்புரிவதில் அக்காலச் செல்வர் ஓர் அறிமட .மேற்கூறிய மொழிக்குச் சான்றாகக் காட்டலாம் புகழுக்குத் தலை .உணர்ச்சியைக் சுடைபிடித்தமைக்கும் இப்புகழ் வேட்கையே காரணமாகும் நிமிர்தலும், பழிக்குத் தலையிறைஞ்சுதலும், சான்றவர் இயற்கைப் பண்புகளாகும்பழி படர்ந்த . நெறியில் செல்லாமையும், பழியொடு வரும் செல்வம் வெஃகாமையும் செல்நெறிக் குறிக்கோள் இரண்டிலும், பண்டைச் சான்றோர் தூயத்தன்மை உடையவராயிருந்தார் என்பதை புறநானூறு உணர்த்துகிறது".

பொத்தியாரின் பாடல் ஒன்று வேந்தர்கள் புகழ் வாய்ந்தவர்களாய்த் திகழ்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றது கோப்பெருஞ்சோழனைப் பாடும் போது பாடுநர்க் கீந்த பல்புகழாளன். அறவோர் புகழ்ந்த செங்கோலன் .ஆடுநர்க்கு ஈந்த பேரன்பினன் :; இறவோர் புகழ்ந்த திண்ணன்பினன் .மகளிர் சாயல் ; மைந்தர்க்கு மைந்து; 'துகளறு கேள்வி உயர்ந்தோர் புக்கில்' என்று அவன் திறம்பாடுவார் பொத்தியார்வேந்தர்களைப் புலவர்கள் பாடிய செய்யுள்களில் ". .இருந்து அவர்களின் புகழை உணரமுடிகிறது தமிழர்கள் புகழார்ந்த நிலையை விரும்பியவர்களாக இருந்துள்ளனர் என்பதைப் புலவர்களின் புகழுரைகள் காட்டுகின்றன . மாறோக்கத்து நப்பசலையார் என்ற புலவர் காரியைப் பாடும்போது,

இனிப்புகழ்தற்கு இடனில்லாத வகையில் நின் புகழைக் கபிலன் பாடினன்இனி யாமும் . கபிலரால் வேந்தவர்கள் ".நின் வண்மையில் சில கூறத் தொடங்குகின்றோம் என்கிறார் பாடப்பட்ட பிறகு புலவர் பிறர் அவ்வேந்தரைத் தாம் அவ்வளவு சிறப்பாகப் பாட முடியுமோ

*என்ற எண்ணமுடையவர் என்பதை இப்பாடலைக் காணும் போது தெரிய வருகிறது . இதனால் வேந்தர், புலவர், இவர்களுக்கிடையே இருந்த புகழ் எண்ணம் குறித்த செய்தி புலப்படுகிறதுஆய் . அண்டிரனைப் புலவர் முடமோசியார் பாடும்போது.*

*நின்னின்று வறுவி தாகிய வுலகத்து*
*நிலவன் மாரோ புலவர் துன்னிப்*
*பெரிய வோதினுஞ் சிறிய வுணராப்*
*பீடின்று பெருகிய திருவிற்*
*பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே ! (புறநானூறு 357:17-21)*

*என்று பாடியுள்ளார் இதிலிருந்து சங்க காலத்துப் புலவர்கள் .புகழுக்கு உரிய தகுதி படைத்தவர்களை மட்டுமே பாடியுள்ளனர் என்பதை அறியலாம்இச்செய்யுளை மையமாகக் . கொண்டு சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள புகழுரைகள் யாவும் உண்மைத்தன்மை வாய்ந்தவை என்பதையும் தமிழர்கள் எந்த அளவிற்குப் புகழ் வாய்ந்தவர்களாய்த் திகழ்ந்துள்ளனர் என்பதையும் புகழை விரும்பியுள்ளனர் என்பதையும் உய்த்துணரலாம்.*

*முடிவுரை:*

*சிறந்த பண்பாளர்களாலேயே உலகம் நிலைபெறுகிறதுமனம் செம்மைப்படுதலே . பண்பாடு என்பதால் இது அகம் சார்ந்ததாகவும், நாகரிகம் புறம் சார்ந்ததாகவும் உள்ளதுபண்பாடு . என்னும் சொல் சங்க இலக்கியத்துள் நேரடியாகக் கிடைக்கப் பெறவில்லை என்றாலும் அச்சொல் குறித்த பொருண்மை பலவாறாகப் பல்கிக் கிடக்கின்றன.*

*நாடினோரும் துறவறத்தை மேற்கொண்டனர்காவியணிந்து ., சடைதாங்கி, கானுறை முனிவர்கள் உலக நன்மை கருதி வேள்வி செய்தலையும் தவம் புரிதலையும் துறவு நெறியாகக் கொண்டனர்உயரிய பண்பாட்டைப் பின்பற்றும் ஒவ்வொரு தனிமனிதனாலும் நல்லறங்கள் . நடைமுறைப் படுத்தப்பட்டு, குடும்பமும், சமூகத்தின் பல்துறைகளும் சிறப்படையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.*

*துணைநூற்பட்டியல்*

*1. அகநானூறு*
*ந.சை .வேங்கடாசலம் பிள்ளை உரை.வேங்கடசாமி ரா.மு.சிகழகம்.நூ., சென்னை, முதற்பதிப்பு, 1947.*

*2 ஐங்குறுநூறு*
*பொகழகம்.நூ.சி.சை .சோமசுந்தரனார் உரை.வே., சென்னை .फाप, 1979.*

*3 கலித்தொகை*
*நச்சினார்க்கினிய உரையும்(பதி) அனந்தராமையர்.வை.இ ., தமிழ்ப் பல்கலைக்கழகம் . தஞ்சாவூர், 1984.*

*4 குறுந்தொகை*
*உசாமிநாதைய் உரை.வே., அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலை நகர், முதற்பதிப்பு, 1983.*

*5 நற்றிணை*
*பின்னத்தூர் அகழகம்.நூ.ச .சை .நாராயணசாமி ஐயர் உரை., சென்னை .1979*

*6. புறநானூறு*
*நச்சினார்க்கினியர் உரையும், உதமிழ்ப் பல்கலைக்கழ .சாமிநாதையர் பதிப்பு.வே.க வெளியீடு, தஞ்சாவூர், 1986.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********